சிவில் சேவை நிதியம்(CSF 2009- பணக்கொடை விண்ணப்ப வழிகாட்டல்கள்

தொனிப் பொருள் :- உள்நாட்டுச் சேவை வினியோகத்தில் வகைப் பொறுப்பிற்கான பரப்புரை(advocacy)

உள்நாட்டு அரசாங்க சேவைகளைப் பலப்படுத்தலுக்கு CSF 2009 ஆதரவு வழங்கும் அத்துடன் பங்குடமைகளை ஊக்குவித்து உத்தேச செயற்றிட்டத்தின் இறுதியில் திட்டவட்டமான பெறுபேறுகளை உருவாக்கும் சிவில் சமூக அமைப்பக்களிடமிருந்து புத்தாக்கமான விண்ணப்பங்களை அது கோருகிறது.

அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட உலக வங்கியின் நாட்டிற்கான உதவி உபாயத்தின் (CAS) ஒரு பிரதானமான குறிக்கோள் தரமான சேவைகளையும் வகைப் பொறுப்பினையும் அதிகரிப்பதாகும்.ஊயுளு 2009-202 இல்குறிப்பிடப்பட்டது போன்று இலங்கையின் முன்னுரிமைகளுக்கு குறைநிரப்பு செய்கின்ற செயற்றிட்டங்களை CSF 2009 எதிர்பார்க்கும்.

சமூக மட்டத்திலுள்ள பரப்புரைத் திட்டங்களுடன் தொடர்பான திட்டவட்டமான பெறுபேறுகளைக்காட்டக் கூடிய செயற்றிட்டத்தின் பலமென்பது CSF 2009 இல் விண்ணப்பங்களைத் தெரிவு செய்வதற்கான தகைமை அளவு கோல்களில் ஒன்றாக அமையும்.உதாரணமாக சேவை வினியோகத்திலுள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துவதற்கு ஊடகத்தைப் பாவித்தல், சுகாதாரம் மற்றும் கல்வியுடன் தொடர்பு பட்ட சேவை வினியோகத்திற்கான சமூக பெறுபேற்று அட்டைகள்(Community Score cards)செயலினை அடிப்படையாகக் கொண்ட பரப்புரையில் உதவி பெறுபவர் பங்குடமையில் ஈடுபடுகின்ற அரச தனியார் பங்குடமைகளுக்கூடாக மேலதிக வளங்களை உருவாக்குவதற்கான ஆற்றல் (அதாவது செய்வதன் மூலம் ஒன்றை நிரூபித்தல்)

ஊளுகு 2009 விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும் போத கீழுள்ள வழிகாட்டல்களை பின்பற்றவும்.

**செயற்பாட்டச்சுருக்கம்.**(ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் பயன்படத்தி 350-400 சொற்களை டைப் செய்யவும்.)

1 திகதி
2 அமைப்பின் பெயர்
3 தொடர்பு கொள்ள வேண்டிய நபரும் பதவிப் பெயரும்
4 முகவரி
5. நகரம், நாடு, அஞ்சல் குறியீடு
6. தொலைபேசி
பாக்ஸ்
மின்னஞ்சல்

இணையத்தளம் (இருந்தால்)

---

வழிகாட்டல்:- செயற்றிட்ட அமுலாக்கலுக்கு பொறுப்பாக இருக்கும் பிரதான நபருடன் தொடர்பு கொள்வதற்கான தகவல்களையும் தருக.தேவைப்படுமிடத்து அவர் தொலைபேசி மூலம் அவர் தொடர்பு கொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும்.

---

7. விண்ணப்பிக்கும் அமைப்பின் பணிக்கூற்று(Mission Statement)
வழிகாட்டல்:-அமைப்பின் ஆணையை முதன்மைப்படுத்துகின்ற ஒரு சுருக்கமான அறிக்கையைத் தரவும்.

---

8. நிதிபெறுவதற்கான வேண்டுகோளின் நோக்கமும் இச்செயற்பாடு எவ்வாறு குடிசார் பங்கு பற்றலுடன் (Civic engagement) தொடர்பு படுகிறது என்பதும்.

வழிகாட்டல் :- உத்தேச செயற்திட்டத்தின் இலக்கு அல்லது உத்தேச செயற்திட்டம் அமுலாக்கப்பட்ட பின்னர் சமூகத்தில் ஏற்படும் என எதிர்பார்க்கப்படும் மாற்றம் இங்கு குறிப்பிடப்பட வேண்டும். உத்தேச செயற்திட்டத்தின் அமுலாக்கத்தில் யார் ஈடுபடுவார் என்பது பற்றிய ஓர் சுருக்கமான அறிக்கையையும் சேர்த்துக் கொள்ளவும். செயற்திட்ட தயாரிப்பலும், அமுலாக்கத்திலும் சமூகங்கள்/பாதிக்கப்பட்ட மக்கள் அல்லது பங்கீடுபாட்டாளர் எவ்வாறு ஈடுபடுவர் என்பது பற்றி திட்டவட்டமாகக் குறிப்பிடவும் செயற்திட்டத்தை கண்காணித்து மதிப்பிடுவதற்கான பொறிமுறைகளும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

---

9. இலக்காகக் கொள்ளப்படும் மக்களும் உத்தேச செயற்பாடுகளிலிருந்து நன்மை பெறுபவர்களது எண்ணிக்கையும்

வழிகாட்டல் :- இலக்காகக் கொள்ளப்படும் பயனாளிகளது உண்மையான தொகையை தருக. தேவைப்படுமிடத்து உரிய பால்நிலை இனத்துவப் பிண்ணணி தகவல்கள் ஆகியவற்றையும் தருக.

---

10. செயற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகள்.

வழிகாட்டல் :- செயற்திட்டத்தின் விளைவுகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் காட்டுகின்ற ஒரு சுருக்கமான அறிக்கையை தருக. உதாரணமாக, பாடசாலையிலிருந்து இடைவிலகியோரது தொகை மொழிகளிலும் கணிதத்திலும் மாணவரது செயலாக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் வைத்தியசாலை நோயாளிகள் காத்திருக்கும் நேரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி. செயற்திட்ட பெறுபேறு முதலியவற்றின் விளைவாக மாற்றமடைந்த/ஏற்பட்ட ஒரு கொள்கை.

11. கற்றலுக்கும் அறிவுப்பகிர்வுக்குமான திட்டங்கள்.

வழிகாட்டல் :- ஏனைய அரச, தனியார் துறை அமைப்புக்களுடன் செயற்பட்டு கற்றுக் கொண்ட பயனுறுதியான நடைமுறைகளையும் பாடங்களையும் எவ்வாறு நீங்கள் பகிர்ந்து கொள்வீர்கள் என்பதையும் குறிப்பிடுக. நீங்கள் ஒரே இலக்குகளை நோக்கிச் செயற்படும் அமைப்புக்களின் ஒரு ஒன்றியத்தை அல்லது வலையமைப்பை சேர்ந்தவரா? ஊடகம் மற்றும் ஏனைய தகவல் பரப்பும் வழி முறைகளுக்கூடாக மேற் கொள்ளப்படும் தனது செயற்பாடுகள் தொடர்பாக உமது

அமைப்பு எவ்வாறு ஒழிவு மறைவற்றதாக இருக்க நினைக்கிறது என்பதை தயவு செய்து இங்கு குறிப்பிடவும்.

12. இந்நிதி உதவி உள்ளடக்கும் காலப்பகுதி.

வழிகாட்டல் :- பணக்கொடையை பெற்றதிலிருந்து ஒருவருடத்திற்கு நீடிக்க வேண்டிய செயற்திட்ட கால எல்லையை இங்கு குறிப்பிடவும்.இக்காலப்பகுதிக்குப்பின்னர் உத்தேச செயற்பாடுகளை எவ்வாறு தொடர உத்தேசிக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிடவும்.

13. விண்ணப்பிக்கும் தொகை விபரங்கள்.(செயற்பாட்டு வருமானத்தின் கீழ்)

வழிகாட்டல் :- வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் போது ஏதாவது பங்காளியமைப்புக்கள் ஏனைய கொடையாளிகள் அல்லது தனியார் துறை நிறுவனங்களது பங்களிப்புக்களையும் குறிப்பிட்டு யதார்த்தமாக தயாரிக்கவும். CSF இனால் ஆதரவளிக்கப்படாத விடையங்கள் தொடர்பான CSF பொது வழிகாட்டல்கள் பற்றிய பகுதியையும் வாசிக்கவும்.

14. உலகை வங்கியிடமிருந்து முன்னர் உதவிகளை பெற்றிருப்பின் வருடம்இதொகை ஆகியவற்றை பட்டியல் படுத்தி என்ன நோக்கத்திற்காக உதவி பெறப்பட்டது என்பதையும் விபரிக்க.

குறிப்பு :- ஐந்து வருட காலப்பகுதியினுள் சிவில் சமூக நிதியத்திலிருந்து மூன்றுக்கு மேற்பட்ட பணக்கொடைகளைப் பெறுவதற்கு அமைப்புக்கள் தகுதியற்றவை.

15. விண்ணப்பிக்கும் அமைப்பினுடைய நிறைவேற்றுப்பணிப்பாளர் அல்லது சபைத்தலைவர் அதிகாரமளித்து இடும் கையொப்பம்.

கையொப்பம்

பெயர்(அச்சிடுக): திகதி